மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 09 ம் நாள் சனிக்கிழமை
இடைநிலை மனு எண். 06/2024
இன்
இடைநிலை மனு எண்.05/2024
இன்
அசல் வழக்கு எண்.48/2020
-------

ஸ்டாலின்ராஜா .. மனுதாரர்/வாதி

/எதிர்/

1. கருப்பசாமி (இறப்பு)
2. பாலசரஸ்வதி (இறப்பு)
3. கருப்பசாமி
4. சிங்கராஜ்
5. சிங்கலட்சுமி
6. சங்கரேஸ்வரி
7. ஆறுமுகம் .. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 11.07.2025 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. வி. மாரிச்சாமி, அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இறந்து விட்ட நிலையிலும், 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. வி.ஏ. விஸ்வநாத், அவர்கள் ஆஜராகியும், 7 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. கார்த்திக் ராஜா, அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளதாலும், மனுதாரர் தரப்பு வாதுரை, மனு, அபிடவிட்டு, ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இந்த மனுவானது அசல் மனுவில் 2 ம் பிரதிவாதியின் பெயருக்கு அடுத்து

இறப்பு என்று சேர்த்துக்கொண்டு வழக்கினை மேல்நடத்த அனுமதித்து உத்தரவிட வேண்டி கட்டளை 6 விதி 17–ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்</u>–

**2.1.** மனுவில் மனுதாரர், அசல் வழக்கில் வாதி. இ.ம.எண்.05/2024 மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு நிலுவையில் இருந்து வந்த நிலையில் 2ம் பிரதிவாதி இறந்துவிட்டார். 2ம் பிரதிவாதியின் வாரிசுகள் ஏற்கனவே சேர்த்து மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனப்டி 2ம் பிரதிவாதியின் பெயருக்கு அடுத்து இறப்பு என்று சேர்த்து அசல் மனுவை விசாரணைக்கு மேற்கொள்ள வேண்டியது. இல்லாது போனால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே மனு தாக்கல்.

3. 3 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ளார்கள்.

**4.** மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6.** <u>**தீர்வு**</u>

6.1. மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. மனுதாரர் அசல் மனுவில் 2ம் பிரதிவாதியின் பெயருக்கு அடுத்து இறப்பு என்று சேர்த்து அசல் வழக்கினை விசாரணைக்கு மேற்கொள்ள வேண்டியது அவசியம் என உத்தரவிடக்கோரி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர் கூறும் காரணம் என்னவென்றால், மேற்படி வழக்கில் இ.ம.எண்.05/2024 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது நிலுவையில் இருந்த சமயத்தில் 2ம் பிரதிவாதி இறந்து விட்டதால் அவரது பெயருக்கு அடுத்து இறப்பு என சேர்த்து அசல் மனுவினை விசாரணைக்கு மேற்கொள்ள வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை

அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ளார்கள். எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. வழக்கின் சூழ்நிலை மற்றும் சங்கதிகளை கருத்தில் கொண்டு மனுதாரர் மனுவில் கோரிய பரிகாரமானது அவருக்கு கிடைக்கத்தக்கது என தீர்வு காணப்படுகிறது.

7, **<u>இறுதி முடிவு–</u>**

இறுதியாக இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09–ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**<u>சாட்சி, சான்றாவணங்கள்</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**

இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.06/2024
இன்
இ.ம.எண்.05/2024
இன்
அ.வ.எண்.48/2020
**உத்தரவு**
நாள்–09.08.2025.